**CNR No. TNTU07-000183-2021**

**மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம் மற்றும்**
**சார்பு நீதிமன்றம்,வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்.**

**முன்னிலை :** B. ராஜா, பி.ஏ., பி.எல்.,

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயர் மற்றும் சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ம் நாள் வெள்ளிக் கிழமை
(2058 திருவள்ளுவர் ஆண்டு, ஸ்ரீ பராபவ வருடம் சித்திரைத் திங்கள் 04ம் நாள்)

**மோட்டார் வாகன விபத்து அசல் மனு எண்.57/2021**

பீதாம்பரம்
த/பெ. பச்சையப்பன். .... மனுதாரர்

/எதிர்/

1. உஷா
க/பெ வெங்கடேசன்
2. பாபு
த/பெ. கோவிந்தசாமி
3. SBI ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
மும்பை. .... எதிர்மனுதாரர்கள்

இம்மனு கடந்த 01.04.2026ம் தேதி, இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இம்மனுவில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.வி.குணசேகரன், அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தோன்றா தரப்பினர்கள் நிலையில் வைக்கப்பட்டும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.கே.நிரூபமா, அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்துள்ள மனுக் கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாகப் பரிசீலனை செய்தபின், இருதரப்பு வாதங்களையும் கேட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ....

**உத்தரவு**

01) கடந்த 23.10.2020ம் தேதி, இரவு 9.10 மணியளவில், புத்துகோயில் to நாட்றம்பள்ளி சர்வீஸ் ரோட்டில், கரிகுட்டி வட்டம் என்ற இடத்திற்கு அருகில் ஏற்பட்டுள்ள மோட்டார் வாகன சாலை விபத்தில், கொடுங்காயம் மற்றும் நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ள மனுதாரருக்கு, எதிர்மனுதாரர்களிடமிருந்து மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தொகையாக மொத்தம் ரூ.30,00,000/- பின்வட்டியுடன் பெறுவதற்காக, மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

02) **<u>மனுவின் சுருக்கம் :-</u>**

கடந்த 23.10.2020ம் தேதி, இரவு 9.10 மணியளவில், புத்துகோயில் to நாட்றம்பள்ளி சர்வீஸ் ரோட்டில், கரிகுட்டி வட்டம் என்ற இடத்திற்கு அருகில், மனுதாரர் TN 23 AC 8842 என்ற பதிவு எண் கொண்ட ஆட்டோவில் சென்றுள்ளார். மேற்படி ஆட்டோவை அதன் ஓட்டுநர் மிதமான வேகத்தில், சாலை விதிமுறையை பின்பற்றி ரோட்டின் இடதுபுறமாக ஓட்டிச்சென்றுள்ளார்.

அச்சமயம், மேற்படி இடத்தில், TN 52 C 8077 என்ற பதிவு எண் கொண்ட லாரியை, அதன் ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவுடனும், எந்தவொரு சிக்னலும் செய்யாமல், ரோட்டின் நடுவில் நிறுத்தியுள்ள காரணத்தினால், மேற்படி லாரியின் பின்புறத்தில் மனுதாரர் சென்றுள்ள ஆட்டோ மோதி சாலை விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து காரணமாக, மனுதாரருக்கு, உடலில் பல இடங்களில் கொடுங்காயம் ஏற்பட்டு, வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்றுள்ளார். பின் சேலம் ஸ்ரீகோகுலம் மருத்துவமனையிலும், வேலூர் அரசு மருத்துவமனையிலும், சென்னையில் உள்ள அரசு மருத்துவமனையிலும் மனுதாரர் சிகிச்சை பெற்றுள்ளார். மனுதாரர் தொடர்ந்து தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை எடுத்துவருகிறார்.

விபத்து நடந்துள்ள சமயத்தில், மனுதாரர் 40 வயது நிரம்பிய நிலையில், நெடுஞ்சாலைதுறை பராமரிப்பு பணியில் வேலை செய்து மாதம் ரூ.10,000/- வருமானம் பெற்றுள்ளார். விபத்தினால் ஏற்பட்டுள்ள காயங்களினால் மனுதாரருக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

விபத்து தொடர்பாக, பொய் புகார் அடிப்படையில், அம்பலூர் காவல் நிலையத்தில், குற்ற எண்.416/2020ல், இ.த.ச.பிரிவுகள் 279, 337ன் கீழ், மனுதாரர் பயணம் செய்துள்ள TN 23 AC 8842 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோ ஓட்டுநர் மீது குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விபத்து சமயத்தில் மனுதாரர் சென்றுள்ள ஆட்டோவின் உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரர். விபத்தில் தொடர்புடைய விபத்து TN 52 C 8077 என்ற பதிவெண் கொண்ட லாரியின் உரிமையாளர் 2ம் எதிர்மனுதாரர் மற்றும் மேற்படி வாகனம் 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

ஆகையால், மனுதாரர் மனுவில் முன்வைத்துள்ள பல்வேறு தலைப்புகளின் கீழான மொத்தம் ரூ.30,00,000/- ஐ, எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவும், கூட்டாகவும் மனுதாரருக்கு மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தொகையாக கொடுக்கவேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>03) 3ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :</u>**

மனுச் சங்கதிகள் பொய்யானவை, தவறானவை. 3ம் எதிர்மனுதாரர் குறிப்பாக ஒப்புக்கொள்ளும் மனுச் சங்கதிகளை தவிர, மற்றவற்றை மனுதாரர் நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார்.

விபத்து பற்றிய விபரங்களை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். விபத்து சமயத்தில் TN 52 C 8077 என்ற பதிவெண்

கொண்ட லாரியை அதன் ஓட்டுநர் ரோட்டின் இடதுஓரமாக, முறையான சிக்னல்களை ஏரியவிட்டு நிறுத்தியுள்ளார்.

அச்சமயம் மனுதாரர் பயணம் செய்துள்ள TN 23 AC 8842 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோவை, அதன் ஓட்டுநர் உரிய ஓட்டுநர்உரிமம் மற்றும் ஆட்டோவிற்கான காப்பீடு எதுவும் இல்லாமல், அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவுடனும் ஓட்டிகொண்டுவந்து, லாரியின் பின்புறத்தில் மோதி தனிச்சையாக விபத்தை ஏற்படுத்தியுள்ளார்.

விபத்திற்கு TN 23 AC 8842 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோ ஓட்டுநர் காரணம் என்பதால், அம்பலுர் காவல்துறையினர் அவர்மீது குற்ற எண்.416/2020ல் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

விபத்திற்கு லாரி ஓட்டுநர் காரணம் கிடையாது என்பதால், 2, 3 எதிர்மனுதாரர்கள் இம்மனுவிற்கு அவசியமற்ற தரப்பினர்கள் ஆவார்கள். எனவே, 2, 3 எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்கவேண்டிய சட்டபடியான அவசியம் இல்லை.

மனுதாரரின் வயது, தொழில், வருமானம் மற்றும் மருத்துவ சிகிச்சை ஆவணங்கள் போன்றவற்றை மனுதாரர் தகுந்த நிருபிக்க கடமைபட்டுள்ளார். மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டு தொகை மற்றும் வட்டி விகிதம் சட்டத்திற்கு புறம்பானதாகும். ஆகையால், பொய்யான சங்கதிகளுடன், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

05) இம்மனுவினைப் பொறுத்த வரையில், மனுவில் கூறியுள்ள விபத்திற்கு காரணம் யார்? என்பதும், எதிர்மனுதாரர்களிடமிருந்து மனுதாரருக்கு மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தொகை கிடைக்கக்கூடியதா? என்பதும், அவ்வாறு எனில் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தொகை எவ்வளவு?

என்பதும் இந்நீதிமன்றத்தால் முடிவு காணவேண்டிய தீர்வுக்குரிய பிரச்சனைகளாகும்.

06) மனுதாரர் தரப்பில் மனுவினை தாக்கல் செய்துள்ள மனுதாரர் பீதாம்பரம் என்பவர் ம.சா.ஆ.1 ஆகவும், வேலு என்பவர் ம.சா.ஆ.2 ஆகவும் இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளனர். மனுதாரர் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.15 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

07) மனுவில் கண்டுள்ள 1, 2 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாக உள்ளநிலையில், மனுவினை எதிர்வழக்காடியுள்ள 3ம் எதிர்மனுதாரர் தரப்பில், 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் சட்டமேலாளராக பணிபுரியும் அசோக்ராஜ் என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பு எதிர்வாதத்திற்கு ஆதரவாக எ.ம.சா.ஆ.1, எ.ம.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

08) <u>பிரச்சனைக்குரிய தீர்வு :–</u>

இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களைக் கேட்டு வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் இந்நீதிமன்றம் கவனமாகப் பரிசீலனை செய்துள்ளது. மனுதாரர் மற்றும் 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞர்களால் தனித்தனியாக தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்துமூலமான வாதுரைகள் இந்நீதிமன்ற பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 23.10.2020ம் தேதி, இரவு 9.10 மணியளவில், புத்துகோயில் to நாட்றம்பள்ளி சர்வீஸ் ரோட்டில், கரிகுட்டி வட்டம் என்ற இடத்திற்கு அருகில் TN 23 AC 8842 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோவில் மனுதாரர் பயணம் செய்துள்ளார்.

மேற்படி இடத்தில், மனுதாரர் பயணம் செய்துள்ள ஆட்டோவிற்கு முன்னால் TN 52 C 8077 என்ற பதிவு எண் கொண்ட லாரியை அதன் ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவுடனும், எந்தவொரு சிக்னலும் செய்யாமல், ரோட்டின் நடுவில் நிறுத்தியுள்ளதால், அதன் பின் புறத்தில் மனுதாரர் பயணம் செய்துள்ள ஆட்டோ மோதி சாலை விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தினால், மனுதாரருக்கு, உடலில் பல இடங்களில் கொடுங்காயம் ஏற்பட்டு, நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளதாக மனுச்சங்கதிகள் அமைந்துள்ளன.

விபத்து நடந்துள்ள சமயத்தில், விபத்து நடைபெற்றுள்ள இடத்தில் மனுதாரர் TN 23 AC 8842 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோவில் பயணம் செய்துள்ளார் என்ற சங்கதியும், விபத்தில், TN 52 C 8077 என்ற பதிவு எண் கொண்ட லாரி தொடர்புடையது என்ற சங்கதியும், மனுவினை எதிர்த்து வழக்காடியுள்ள 3ம் எதிர்மனுதாரரால் மறுக்கப்படவில்லை.

விபத்து சமயத்தில் மனுதார் பயணம் செய்துள்ள ஆட்டோவை அதன் ஓட்டுநர் போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்றி, மிதமான வேகத்தில் ரோட்டின் இடது ஓரமாக ஓட்டிசென்றுள்ள நிலையில், மேற்படி லாரியை அதன் ஓட்டுநர் அஜாக்கிரதையாக, எந்தவொரு சிக்னலும் செய்யாமல் ரோட்டின் நடுவில் நிறுத்தியுள்ள காரணத்தினால், மேற்படி லாரியின் பின்புறத்தில் மனுதாரர் பயணம் செய்துள்ள ஆட்டோ மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்பதால், விபத்திற்கு லாரி ஓட்டுநர் காரணம் என மனுதாரர் மனுவில் கூறியுள்ளார்.

விபத்திற்கு லாரி ஓட்டுநர் காரணம் என கூறி காவல்நிலையத்தில் எந்தவொரு புகாரும் கொடுக்கபடவில்லை. மேற்படி லாரி ஓட்டுநர்

கொடுத்த விபத்து தொடர்பான புகாரின் அடிப்படையில், மனுதாரர் பயணம் செய்துள்ள ஆட்டோ ஓட்டுநருக்கு எதிராக குற்றவழக்கு பதிவு செய்யபட்டுள்ளது.

விபத்து தொடர்பாக, TN 23 AC 8842 என்ற பதிவு எண் கொண்ட ஆட்டோ ஓட்டுநர் மீது அம்பலூர் காவல் நிலையத்தில், குற்றஎண்.416/2020ல் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையின் நகல் ம.சா.ஆ.1 ஆக மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மனுவின் எதிர்வழக்காடியுள்ள 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி விபத்து தொடர்பான குற்றவழக்கின் இறுதி அறிக்கையின் இணையதள நகல் எ.ம.சா.ஆ. 2 ஆகவும், மேற்படி குற்றவழக்கின் இணையதள முடிவு நகல் எ.ம.சா.ஆ.1 ஆகவும், குறியீடு செய்யபட்டுள்ளது.

மேற்படி ஆவணங்களில் மனுவில் கூறப்பட்டுள்ள விபத்து TN 23 AC 8842 என்ற பதிவவெண் கொண்ட ஆட்டோ ஓட்டுநரின் அதிவேகம், கவனமின்மை மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி குற்றவழக்கினை ஒப்புகொண்டு விபத்து சமயத்தில் ஆட்டோவை ஓட்டியுள்ள ஓட்டுநர் குற்றவியல் நீதிமன்றத்தில் ரூ.1,500/- அபராதம் செலுத்தியுள்ளதாக எ.ம.சா.ஆ. 1ஆவணத்தில் குறிப்புகள் உள்ளது.

மேற்படி ஆட்டோ ஓட்டுநருக்கு எதிராக பொய்யான புகாரின் அடிப்படையில் ம.சா.ஆ. 1 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யபட்டுள்ளதாக மனுதாரர் மனுவில் கூறியுள்ள நிலையில், மேற்படி ஆட்டோ ஓட்டுநர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு, விபத்து தொடர்பான குற்றவழக்கில் அபராதம் செலுத்தியுள்ளார் என்ற சங்கதி மனுதாரர் தரப்பு வழக்கிற்கு எதிரானதாக அமைந்துள்ளது.

இச்சூழ்நிலையில், விபத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியாக மனுதாரர் தரப்பில் இவ்வழக்கில் விசாரணை செய்யபட்டுள்ள ம.சா.2 வேலு என்பவரின் வாய்மொழி சாட்சியம், மனுதாரர் தரப்பு வழக்கிற்கு எவ்வகையிலும் பலன் தரக்கூடியதாக அமையவில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

ஆகையால், மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், மனுவில் கூறப்பட்டுள்ள விபத்திற்கு TN 23 AC 8842 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோ ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதை மற்றும் கவனமின்மை காரணமென இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

விபத்தில் தொடர்புடைய TN 23 AC 8842 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோவின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் ஆவணமான ம.சா.ஆ.5 ஆவணத்தில், மேற்படி வாகனத்தின் உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுதாரர் விபத்திற்கு பின் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெற்றுள்ளார் என்பதை மேற்படி மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ள ம.சா.ஆ.7 விபத்து பதிவேட்டு நகல் ஆவணத்தின் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது.

மனுதாரர் சென்னையில் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளது தொடர்பான மருத்துவமனை வெளியேற்றுகை குறிப்பு ஆவண நகல் ம.சா.ஆ 10 ஆக மனுதாரர் தரப்பில் இவ்வழக்கில் குறியீடு செய்யபட்டுள்ளது.

மேற்படி ஆவணத்தில் கடந்த 28.10.2020ம் தேதி முதல் 10.04.2021 தேதி வரை சுமார் 6 மாத காலத்திற்கு மேலாக மேற்படி மருத்துவமனையில் மனுதாரர் உள்நோயாளியாக அனுமதிக்கபட்டு சிகிச்சை பெற்றுள்ளார் என்ற உண்மையை கண்டறிந்து கொள்ள முடிகிறது.

மனுதாரர் விபத்தினால் ஏற்பட்டுள்ள காயங்களுக்காக தொடர் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டுள்ளார் என்பதை நிரூபணம் செய்வதற்கு இந்நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பில் எந்தவொரு சாட்சி மற்றும் சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

மனுதாரர் விபத்து சமயத்தில் 40 வயது பூர்த்தியடைந்து, நெடுஞ்சாலைதுறை ஒப்பந்த பணியில் வேலை செய்து மாதம் ரூ.10,000/- வருமானம் பெற்றுள்ளதாக மனுவில் கூறப்பட்டுள்ளது. ஆனால், அதனை நிரூபிக்கும் பொருட்டு இவ்வழக்கில் மனுதாரர் தரப்பில் எந்தவொரு சாட்சி மற்றும் சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

இந்நிலையில், மனுதாரரின் வயது, உடல் தகுதி ஆகிவற்றை கணக்கில் கொண்டு, மனுதாரர் தரப்பு வழக்கின்படி, விபத்து சமயத்தில் மனுதாரர் மேற்படி வேலை செய்து இருக்கும் பட்சத்தில், மனுதாரருக்கு மாதம் ரூ.8,000/- வருமானம் கிடைத்திருப்பதற்கு நடைமுறை சாத்தியக் கூறுகள் உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

மனுதாரர் இந்நீதிமன்ற உத்தரவுப்படி மருத்துவ குழு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். மேற்படி மருத்துவ குழுவில் அளிக்கப்பட்டுள்ள சான்றிதழில் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள இயலாமை 75% என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற சூழ்நிலைகளில், மனுதாரருக்கு வழங்கவேண்டிய இழப்பீட்டு தொகையை நிர்ணயம் செய்வதற்கு பெருக்கீட்டு எண் விதிமுறையை கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டுமெனக்கூறி சமீபத்தில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட முன்தீர்ப்பை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

**2025 (1) TN MAC 700 (DB)**

**IN THE HIGH COURT OF MADRAS**

PERMANENT DISABILITY – FUNCTIONAL DISABILITY – LOSS OF EARNING CAPACITY – Assessment – Injured/Claimant, aged 27 yrs., working as a Supervisor in a Private Company, earning ₹ 15,000 p.m. as per claim – Suffered Head injury – Post traumatic sequelae of Head injury affecting ability to work and perform daily activities – Medical Board assessed Disability at 70% - In absence of proof of avocation and Income, Tribunal fixed Notional Income at ₹ 10,000 and awarded ₹ 19,99,200 as Loss of Earning Capacity applying Multiplier method – If, proper – Accident occurred in year 2014 – Considering cost of living prevailing in year 2014, Notional Income fixed at ₹ 14,000 p.m. – Adding 40% towards Future Prospects, Monthly Income fixed at ₹ 19,600 - Fixing Functional Disability at 100%, Loss of Earning Capacity awarded at ₹ 39,98,400 [₹ 19,600 x 12 x 17] as against ₹ 19,99,200 awarded by Tribunal - However, ₹ 30,000 awarded by Tribunal towards Loss of Earning during treatment not sustainable.

மேற்படி முன்தீர்ப்பினை மனுதாரர் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது. இச்சூழ்நிலையில், மனுதாரர் முழுவதுமாக தனது செயல்திறனை இழந்து அவரது முழுவருமான வாய்ப்பினை முழுவதுமாக இழந்துள்ளார் என இந்நீதிமன்றம் கணக்கில் எடுத்துக்கொள்கிறது.

மேற்படி முன்தீர்ப்பில் கூறப்பட்டுள்ள பொருண்மைகளின் அடிப்படையில், பெருக்கீட்டு எண்.15ஐ கணக்கில் எடுத்துக்கொண்டு, மனுதாரரின் மொத்த வருமான இழப்பு ரூ.14,40,000/- ( ரூ.8,000 x 12 x 15) என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விபத்தினால் ஏற்பட்டுள்ள காயங்களுக்காக மனுதாரர் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டதன் வகையில், ரூ.1,04,670/-

ற்க்கான மருத்துவ பில்களை ம.சா.ஆ.11 ஆகவும், ரூ.22,000/-ற்க்கான ஆம்புலன்ஸ் பில்களை ம.சா.ஆ.12 ஆகவும், இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களின் உண்மைத்தன்மையை முரண்படுத்தும் வகையில் மனுவினை எதிர்வழக்காடியுள்ள 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் எந்தவொரு சாட்சி, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

எனவே, இம்மனுவில் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தொகையானது கீழ்க்கண்ட தலைப்புகளில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | தலைப்புகள் | இழப்பீட்டிற்கான கணக்கீடு |
|---|---|---|
| 1 | மனுதாரரின் மொத்த வருமான இழப்பீடு | ரூ. 14,40,000/– |
| 2 | போக்குவரத்து செலவினங்களுக்கான இழப்பீடு | ரூ. 25,000/– |
| 3 | ஊட்டச்சத்து வகையிலான செலவுகள் | ரூ. 25,000/– |
| 4 | மனுஉளைச்சல், வலி மற்றும் வேதனைக்கான இழப்பீடு | ரூ. 50,000/– |
| 5 | மருத்துவமனையில் உடன் இருந்தோருக்கான ஊதியம் | ரூ. 10,000/– |
| 6 | மருத்துவமனை பில்கள் | ரூ. 1,04,670/– |
| மொத்தம் | | ரூ.16,54,670/– |

மேற்கூறியவாறு கணக்கிடப்பட்டுள்ள மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தொகையை விபத்தில் தொடர்புடைய TN 23 AC 8842 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோவின் உரிமையாளர் என்ற முறையில் 1ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு கொடுக்கக் கடமைப்பட்டுள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு கண்டு, மனுப் பிரச்சனைக்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

08) *முடிவில்,* இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கு மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தொகையாக ரூ. 16,54,670/-ஐ, 1 எதிர்மனுதாரர் ஆண்டு வட்டி 7.5% மற்றும் விகிதாச்சார செலவுத் தொகையுடன் சேர்த்து கணக்கிட்டு செலுத்தவேண்டுமென்றும், மேற்படி தொகைக்கு மனு தாக்கல் செய்த தேதி முதல் தீர்விற்கான முழுத்தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை, ஆண்டு வட்டி 7.5% கணக்கீடு செய்து செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மேற்படி, இழப்பீட்டு தொகையை 1ம் எதிர்மனுதாரர் ஒரு மாத காலத்திற்குள், சார்பு நீதிபதி, MACT, பாரத ஸ்டேட் வங்கி, வாணியம்பாடி கிளை, நடப்பு கணக்கு எண்.35967133396-ல் RTGS என்ற தலைப்பில் வைப்பீடு செய்ய வேண்டுமென உத்தரவிடப்படுகிறது. 2,3 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மனுப்பரிகாரம் தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது`.

மேற்படி இழப்பீட்டு தொகை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்படும் பட்சத்தில், மனுதாரர் அதனை உடனடியாக நீதிமன்றத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று உத்தரவிடப்படுகிறது.

மனுவில் தீர்வுத் தொகைக்கான நீதிமன்ற கட்டணம் ரூ.15,920/- என நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரர் ஏற்கனவே செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் ரூ.373/- யை கழித்துகொண்டு, மீதியுள்ள நீதிமன்ற கட்டணம் ரூ.15,547/- உத்தரவு தேதியிலிருந்து 1 மாத காலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்த வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் இழப்பீட்டு தொகைக்குரிய வட்டியையும், இம்மனுவின் உத்தரவு நகலையும் பெற முடியாது என உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் வழக்கறிஞர் ஊதியம் ரூ.23,550/- என நிர்ணயம் செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் நேரிடையாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE,
VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.04.17 17:36:50 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை
தீர்ப்பாயர் மற்றும் சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.

**மனுதாரர் தரப்பு சாட்சி :**

ம.சா.1 – பீதாம்பரம்

ம.சா.2 – வேலு

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :**

| ஆவணங்களின் வரிசை எண். | தேதி | ஆவணங்களின் தன்மை |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 23.10.2020 | முதல் தகவல் அறிக்கையின் நகல். |
| ம.சா.ஆ.2 | -- | TN 52 C 8077 என்ற பதிவெண்கொண்ட லாரியின் பதிவு சான்று நகல் |
| ம.சா.ஆ.3 | -- | TN 52 C 8077 என்ற பதிவெண்கொண்ட லாரியின் காப்பீட்டு பாலிசி நகல் |
| ம.சா.ஆ.4 | -- | TN 52 C 8077 என்ற பதிவெண்கொண்ட லாரியின் ஓட்டுநர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ.5 | -- | TN 23 AC 8842 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோவின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல். |
| ம.சா.ஆ.6 | -- | TN 23 AC 8842 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோவின் பதிவு சான்று நகல். |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.7 | -- | TN 23 AC 8842 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோவின் ஓட்டுநர் உரிமம் நகல். |
| ம.சா.ஆ.8 | -- | TN 52 C 8077 என்ற பதிவெண்கொண்ட லாரியின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ.9 | -- | வாணியம்பாடி அரசு மருத்துவமனை விபத்து பதிவேட்டு நகல். |
| ம.சா.ஆ.10 | -- | சென்னை அரசு மருத்துவமனை வெளியேற்றுகை குறிப்பு நகல். |
| ம.சா.ஆ.11 | -- | மருத்துவமனை பில்கள். |
| ம.சா.ஆ.12 | -- | ஆம்புலன்ஸ் வாடகை ரசீதுகள் |
| ம.சா.ஆ.13 | -- | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல். |
| ம.சா.ஆ.14 | -- | மனுதாரரின் பான்கார்டு நகல் |
| ம.சா.ஆ.15 | -- | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல். |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>**

எ.ம.சா. 1 – அசோக்ராஜ்

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| **ஆவணங்களின் வரிசை எண்.** | **தேதி** | **ஆவணங்களின் தன்மை** |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | -- | விபத்து தொடர்பான குற்றவழக்கின் இணையதள முடிவு நகல். |
| எ.ம.சா.ஆ.2 | -- | விபத்து தொடர்பான குற்றவழக்கின் இறுதி அறிக்கை இணையதள முடிவு நகல். |

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.04.17 17:37:07 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை
தீர்ப்பாயர் மற்றும் சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.